DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | புருசோத்தமன் |
| Father's Name | சுப்பிரமணிய கவுண்டர் |
| Village | அரப்பாண்டகுப்பம் |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | விவசாயம் |
| Age | 69 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **13.06.2025**

**O.S.No. 101/2018** வா.சா.1

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே **17.11.1999 –**ம் தேதியில் பரிவர்த்தனை பத்திரம் ஏதேனும் ஏற்பட்டதா என்றால் சரிதான். மேற்படி பரிவர்த்தனை பத்திரம் எந்த காரணத்திற்காக எழுதப்பட்டது என்றால் எனக்கு பாதிக்கப்பட்ட நிலத்தை பிரதிவாதி விடமாட்டேன் என பிரச்சனை செய்ததால் ஊர் பஞ்சாயத்தார் முன்பு மேற்படி பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டோம்.

2. மேற்படி பரிவர்த்தனை பத்திரத்தில் பஞ்சாயத்தார் பேசி ஒப்புக்கொண்டு எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. பஞ்சாயத்தாரின் சாட்சி கையெழுத்துக்கள் இருக்கிறது. பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள விஸ்தீரனத்தின் படி தான் பட்டா மாற்றம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல சரியாகத்தான் 1987–ம் வருடமே ஏற்பட்டுள்ளது. பின்பு பரிவர்த்தனை பத்திரம் எந்த காரணத்திற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால்

என்னுடைய துண்டு நிலம் சுமார் 7 சென்ட்–ஐ பிரதிவாதி எனக்கு விடாததால் ஏற்படுத்தப்பட்டது.

3. நான் சொல்கின்ற இந்த விவரம் பரிவர்த்தனை பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான் அந்த வாசகம் இடம் பெறவில்லை, ஆனால் பஞ்சாயத்தார் சாட்சி கையொப்பம் இட்டுள்ளனர். மேற்படி பரிவர்த்தனை பத்திரத்தில் மாற்றம் செய்யப்பட்ட நிலம் அளவீடு சம்பந்தமாக வரைபடம் ஏதேனும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை மொத்த வரைபடம் இடம்பெற்றுள்ளது. மேற்படி மொத்த இடத்தின் வரைபடம் இடம் பெற்றுள்ளது என்று கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல.

4. எந்த சர்வே எண் சம்மந்தமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 441/1B2, 441/3. 441/1B2 யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். 441/1B2 சொத்தில் எனக்கு முழு பாத்தியமும் இல்லை என்றாலும் முழு அனுபவமும் இல்லை என்றாலும் சரியல்ல, இன்று வரை என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது.

5. சர்வே எண். 441/3–ல் கண்டுள்ள சொத்தை எனக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றால் பரிவர்த்தனை பத்திரத்தினால் பாத்தியப்பட்டதாகும். 441/3 –ல் எனக்கு எவ்வளவு விஸ்தீரணம் சொத்து இருக்கிறது என்றால் 7 சென்ட் இருக்கிறது. பரிவர்த்தனை பத்திரத்தில் எவ்வளவு சொத்து விஸ்தீரணம் இருக்கிறது என்றால் அதிலும் 7 சென்ட் தான் இருக்கிறது.

6. மேற்படி 441/3–ல் பட்டாவில் எவ்வளவு சென்ட் நிலம் உள்ளது என்றால் அதிலும் 7 சென்ட் நிலம் தான் இருக்கிறது. மேற்படி 441/3 –ல் சொத்திற்கு கிழக்கே எந்த சொத்து அமைந்திருக்கிறது என்றால் என்னுடைய சொத்து தான் அதன் சர்வே எண்.440. மேற்படி வரப்பு எந்த சொத்தில் உள்ளது என்றால் எனக்கு பாதிக்கப்பட்ட 440–ல் உள்ளது. 441/3–ல் உள்ள சொத்திற்கு மேற்கு புறத்தில்

பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி வாதி மற்றும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு இடையில் தான் பொது வரப்பில் இருக்கிறது என்றால் சரியல்ல, என்னுடைய நிலத்தில் தான் உள்ளது.

7. மேற்படி பொது வரப்பிற்கு மேற்கு புறம் இருக்கும் நிலம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வரப்பும் வரப்பிற்கு கீழ் உள்ள சொத்தும் தான் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கின் இரண்டாவது ஐட்டம் சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரிதான்.

8. வழக்கு 1–வது ஐட்டம் சொத்து சர்வே எண்.441/1B2 பாகப்பிரிவினையின் போது அதன் சர்வே எண்.441/1 ஆக இருந்தது என்றால் சரிதான். பாகப்பிரிவினைக்குப் பின்புதான் 441/1B ஆக மாறியது என்றால் சரிதான். 441/1B–ல் உள்ள 7 சென்ட் சொத்தை தான் பிரதிவாதிக்கு பரிவர்த்தனை பத்திரத்தில் நான் கொடுத்தேன் என்றால் சரிதான்.

9. 441/1B–ல் உள்ள 7 சென்ட் சொத்தை தான் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட நிலத்தை தவிர்த்து மீதமுள்ள சென்ட் நிலம் யாருடைய பெயரில் வருகிறது என்றால் 441/1B2–ல் என்னுடைய பெயரில் இருக்கிறது. மேற்படி 441/1B–ல் உள்ள 7 சென்ட் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட நிலமானது இன்னும் பிரதிவாதியின் பெயருக்கு மாற்றப்படவில்லை என்றாலும் தற்போதும் அந்த 7 சென்ட் நிலமானது 441/1B2–ல் தான் உள்ளது என்றால் சரிதான்.

10. என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையரின் வரைபடமான நீ.சா.ஆ.2 உள்ள 441/1B1–ல் தான் என்னுடைய வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கின் 1–வது ஐயிட்டம் சொத்து 441/1B2–லும் 441/1B1–லும் எனக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு வீட்டிற்கும் மேற்கு புறத்தில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடும் மாட்டு கொட்டாயும் உள்ளது என்றால் சரிதான். 441/1A2–ல் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது ஆனால் வீடு உள்ளது.

மேற்படி பிரதிவாதியின் நிலத்திற்கும் என்னுடைய வீட்டிற்கு இடையிலே காம்பவுண்ட் சுவர் எழுப்பி உள்ளாரா என்றால் சரியல்ல காம்பவுண்ட் சுவர் இல்லை ஆனால் வரப்பு உள்ளது.

11. பரிவர்த்தனை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள 7 சென்ட் நிலத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் இடையே காம்பவுண்ட் சுவர் உள்ளதா என்றால் இல்லை வரப்பு தான் உள்ளது. மேற்படி வரப்பானது பொது வரப்பா என்றால் வரப்பே இல்லை பிரதிவாதியின் நிலம் மற்றும் மாட்டுகொட்டாய் மேட்டுப்பகுதியில் உள்ளது என்னுடைய வீடும் நிலமும் பள்ளப்பகுதியில் உள்ளது.

12. வழக்கு 1–வது ஐயிட்டம் சொத்தானது என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது பிரதிவாதி ஆக்கிரமிப்பு ஏதும் செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் ஏர் உழவோ, அண்டை வெட்டுவதற்கோ பிரதிவாதி தடைசெய்கிறார். நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணையர் யாருடைய சொத்தை அளந்தார் என்றால் பிரதிவாதியின் சொத்தை தான் அளந்தார் என்னுடைய சொத்தை அளக்கவில்லை.

13. 441/1B2–ல் சொத்தில் தெற்குபுறம் பொதுவண்டி வழி கிழக்கு மேற்காக செல்கிறது என்றால் சரியல்ல, அது எனக்கு பாத்தியப்பட்ட சொத்து அது என்னுடைய பாகத்தில் விஸ்தீரணத்தில் வருகிறது. பாகபத்திரமான வா.சா.ஆ.1–ல் உள்ள 4–வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ள "நம்மில் 4லக்காமிட்டவர் திரு. டி.எஸ். புருசோத்தமன் பாக சி ஷெடியூலில் சம்பந்தப்பட்ட நிலத்தில் நிலத்திற்கு தெற்கு ரோட்டில் இருந்து மேற்காக பி ஷெட்டியூல் டி.எஸ்.ஜெயராமன் பாகம் வரை வண்டி வாகனம், லாரி, மாடு, மனிதர்கள் போகவும் வரவும் 10 அடி அகல வழி பாத்தியத்தை தடை செய்யாமல் 4லக்காமிட்டவர் அனுபவித்து வரவேண்டியது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. மேற்படி வண்டி வழியானது பிரதிவாதி மட்டும் அனுபவித்து வர வேண்டியதா என்றால் சரியல்ல. மேற்படி வண்டி வழியை நான்

பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல, அது என்னுடைய நிலம் தான் அந்த 10 அடி வழியை பிரதிவாதி பயன்படுத்த நான்தடை செய்யவில்லை ஆனால் அது பொது வழி அல்ல. வாதி மற்றும் பிரதிவாதியின் சொத்துக்கு மேற்கு புறத்தில் காளியப்பன் வகையறா நிலத்தையும் தாண்டி அருந்ததியர் குடும்பம் ஒன்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி அருந்ததியர் குடும்பம் சென்றுவர என்னுடைய தாத்தா 3 அடி அகல வழி விட்டிருந்தார் என்றால் சரியல்ல அது வெறும் கால் நடைவழி தான். மேற்படி கால்நடைவழி எவ்வளவு அகலம் என்றால் நான் அந்த பத்திரத்தை பார்க்கவில்லை அதனால் தெரியவில்லை, மேற்படி வழியையும் பிரதிவாதி தடை செய்துவிட்டார், அதனால் அந்த வழியே கடந்த 7 வருடமாக மேற்படி அருந்ததியர் குடும்பம் சென்று வரவில்லை. இந்த வழக்கு தொடர்ந்த பின்பு தான் அவ்வாறு பிரதிவாதியால் தடை செய்யப்பட்டது என்றால் சரிதான்.

15. மேற்படி கால்நடை வழி சம்பந்தமாக நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் என்னுடைய வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. மேற்படி கால்நடை வழியானது பெரியசாமி நிலத்தை ஒட்டி சர்வே எண்.441/1–ல் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய நிலத்தில் 10 அடி வண்டி வழி மற்றும் 3 அடி கால்நடை வழி மொத்தமாக 13 அடி வழி இருக்கிறது என்றால் சரிதான். ( மேற்படி கேள்வி பதிவு செய்த பின்பு சாட்சி நீதிபதி அமர்ந்திருந்த திசையை பார்த்து நீதிபதியிடம் அவருடைய தலையை மேலும் கீழுமாக அசைத்தார் அதன் பின்பு "சரிதான் " என பதில் பதிவு செய்யப்பட்டது) (தற்போது சாட்சி 13 அடி வழி இல்லையென்று தெரிவிக்கிறார்).

16. வாதி மற்றும் பிரதிவாதியின் வீடு மற்றும் நிலத்துக்கு இடையே உள்ள வரப்பு சம்மந்தமான பிரச்சினை தான் வழக்கு பிரச்சினை என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்ந்த விதம் சரியில்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் கோரியவாறு பிரதிவாதி என்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு வீண்

தொந்தரவு கொடுக்க வேண்டும் என்று இந்த வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Date: 2025.06.13 19:17:22 +0530

District Munsif,

Vaniyambadi.